# அரசு வழக்காடல் துறை

## அரசு தலைமை வழக்குரைஞர் அலுவலகம், சென்னை உயர்நீதிமன்றம், சென்னை—600 104.

**அறிக்கை எண்.01/2022, நாள் 20.05.2022**

அரசு வழக்காடல் துறையில் அலுவலக உதவியாளர்கள் காலி பணி இடங்களை நிரப்பும் பொருட்டு கீழ்காணும் தகுதிகளின் அடிப்படையில் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. காலி பணியிடங்களுக்கு கீழ்கண்ட மாதிரி விண்ணப்பத்தினைப் பூர்த்தி செய்து சான்றிதழ்களின் நகல்களை சான்றொப்பம் இட்டு இணைத்து அனுப்ப வேண்டும்.

இந்த அறிக்கையானது, இத்துறை அறிக்கை எண்.01/2021 நாள் 10.02.2021 "தி இந்தியன் எக்ஸ்பிரஸ்" ஆங்கில நாளிதழ் மற்றும் "தினமணி" தமிழ் நாளிதழில் வெளியான அறிக்கைக்கு கூடுதலாக வெளியிடப்படுகிறது. அறிக்கை எண்.01/2021–படி விண்ணப்பித்த நபர்கள் இந்த அறிக்கைக்கு விண்ணப்பிக்க தேவையில்லை.

காலி பணியிடங்கள்: 27 பதவிகள் (இந்த பணியிடங்கள் கூடவோ அல்லது குறையவோ செய்யலாம்)

பணி புரியும் இடங்கள்: சென்னை மற்றும் மதுரை

இட ஒதுக்கீடு மற்றும் காலி பணியிடம்:

| General Turn (F) | General Turn (NP) | General Turn (NP) (W) | General Turn (NP) (PSTM) | General Turn (W) (PSTM) | Backward Classes (Other than Backward Class Muslims) (F) | Backward Classes (Other than Backward Class Muslims) (NP) (PSTM) | Backward Class Muslims (NP) (W) (DW) | Backward Class (Other than Muslims) (NP) (W) | Backward Classes (Other than Backward Class Muslims) (NP) (W) | Backward Classes (Other than Backward Class Muslims) (NP) (Ex.ser) | Most Backward Classes and Denotified Communities (F) | Most Backward Classes and Denotified Communities (NP) (DAP-LD/CO) | Most Backward Classes and Denotified Communities (NP) (W) | Most Backward Classes and Denotified Communities (NP) (Ex.ser) | Most Backward Classes and Denotified Communities (NP) | Most Backward Classes and Denotified Communities (W) (PSTM) | Scheduled Castes (NP) | Scheduled Castes (NP) (W) | Scheduled Castes (NP) (Ex.ser) | Scheduled Tribes (F) (PSTM) | TOTAL |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 3 | 2 | 1 | 1 | 2 | 2 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 2 | 1 | 1 | 1 | 27 |

## விண்ணப்ப மாதிரி

| | | விண்ணப்பதாரரின் புகைப்படம் (அரசிதழ் பதிவு பெற்ற அலுவலரிடமிருந்து சான்றொப்பம் பெற்று அனுப்ப வேண்டும்) |
|---|---|---|
| 1. விண்ணப்பதாரரின் பெயர் | | |
| 2. தகப்பனார் / கணவர் பெயர் | | |
| 3. பிறந்த தேதி | | |
| 4. கல்வி தகுதி | | |
| 5. விண்ணப்பதாரரின் சாதி மற்றும் மதம் | | |
| 6. நிரந்தர முகவரி | | |
| 7. தகவல் அனுப்ப வேண்டிய முகவரி | | |
| 8. காவல்துறையில் வழக்கு எதுவும் நிலுவையில் இருந்தால், அதன் விவரம் | | |
| 9. இணைத்து அனுப்பப்படுகின்ற சான்றிதழ்களின் விவரம் | | |
| 10. விண்ணப்பதாரரின் கையொப்பம் | | |

**தேர்வுக்கான தகுதி விவரம்:**

1. **கல்வித் தகுதி:** விண்ணப்பதாரர் VIII ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் (முன்னாள் படைவீரர்களுக்கு இக்கல்வித் தகுதி வலியுறுத்தப்படமாட்டாது). நான்கு சக்கர வாகன உரிமம் பெற்ற விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
2. **வயது:** 01.07.2021 அன்று 18 வயது நிரம்பியவராக இருக்க வேண்டும் - பொது வகுப்பினருக்கு 32க்கு மிகாமலும், பிற்பட்டோர் மற்றும் மிகவும் பிற்பட்ட வகுப்பினர் 34 வயது மிகாமலும் மற்றும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் 37 வயது மிகாமலும் இருக்க வேண்டும்.
3. **இதர விவரங்கள்:** அரசு சார்ந்த அமைப்பு வழங்கிய அடையாளச் சான்றிதழ்/கல்வி சான்றிதழ்/சாதி சான்றிதழ்/முன்னுரிமை தகுதி சான்றிதழ் ஆகியவற்றின் நகல்களில் அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர் சான்றொப்பம் இட்டு விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும்.
4. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் ரூ.50/– அஞ்சல் தலையுடன் கூடிய சுயமுகவரியிட்ட உறையுடன் "அரசு தலைமை வழக்குரைஞர், உயர்நீதிமன்றம், சென்னை–600 104" என்ற முகவரிக்குத் தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 17.06.2022 மாலை 5.45 மணி வரை. கடைசி நாளுக்குப் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்களும், சரிவர பூர்த்தி செய்யப்படாத மற்றும் உரிய சான்றிதழ்கள் இணைக்கப்படாத விண்ணப்பங்களும் ஏற்கப்படமாட்டாது. அஞ்சல் துறை மற்றும் பிற காரணங்களால் விண்ணப்பம் இவ்வலுவலகத்தில் பெறப்பட்டதில் தாமதம் ஏற்பட்டால் அதற்கு இவ்வலுவலகம் பொறுப்பேற்காது.
5. விண்ணப்பதாரர்கள் எழுத்துத் தேர்வு மற்றும் நேர்முக தேர்வின் மூலம் தேர்தெடுக்கப்படுவர்.

செ.ம.தொ.இ /493/வரைகலை/2022

அரசு தலைமை வழக்குரைஞர்,
உயர்நீதிமன்றம், சென்னை–104.

'சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்'